**செய்தி வெளியீடு எண்: 03/09/2021** **நாள்: 15.09.2021**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோவில் மறுசீரமைக்கப்பட்ட முதல் மெட்ரோ இரயில் பயணிகளின் சேவைக்குக் கொண்டுவரப்பட்டது

சென்னை மெட்ரோ இரயில்கள் 2015 ஆம் ஆண்டு முதல் பயணிகளின் சேவைக்காக இய்க்கப்படுகின்றன. ஈடுஇணையற்ற வசதியான சேவையையும் பாதுகாப்பையும் பயணிகளுக்கு வழங்குவதே சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். கடந்த 6 ஆண்டுகளாக, சென்னை மெட்ரோ இரயில்கள் பயணிகளுக்கு உரிய நேரத்தில் குறித்த அட்டவணையின்படி போக்குவரத்து வசதிகளை வழங்கி வருகிறது. அசல் உபகரணங்கள் உற்பத்தியாளர் (Original Equipment Manufacturer) பராமரிப்பு கையேட்டில் அறிவுறுத்தியுள்ளவாறு மெட்ரோ இரயில்களின் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காகக் குறிப்பிட்ட கால இடைவெளியில் மெட்ரோ இரயில்களில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மறுசீரமைப்பின் போது அடித்தளக் கட்டமைப்பிலிருந்து மேற்பகுதி இரயில் பெட்டிகள் மற்றும் அதன் உபகரணங்கள் அகற்றப்பட்டு அனைத்து பற்றவைக்கப்பட்ட இணைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, பற்றவைப்பு இணைப்புகள் மற்றும் இரயில் பெட்டிகளின் சட்டகங்களுக்கு மீண்டும் வண்ணம் பூசி, முதன்மையான இடைநீக்கச் சுருள்கள் 100% மாற்றப்பட்டு, சக்கரங்கள் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டு, உள் குறைபாடுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த குறைபாடுகளை அறியும் அல்ட்ராசோனிக் சோதனைக்கு அச்சுகள் உட்படுத்தப்பட்டு, பழுதடைந்த பாகங்களும் மாற்றப்பட்டு, இழுவை மாற்றி, துணை மாற்றி, பிரேக் அமைப்புகள் மற்றும் காற்றுச்சீரமைத்தல் அமைப்பு போன்றவை முழுமையாக மறுசீரமைப்பு செய்யப்பட்டு பயணிகளின் வசதிக்காக மெட்ரோ இரயில்கள் மீண்டும் இயக்கப்படுகின்றன.

கூடுதலாக, சுற்றுச்சூழலுக்கு உகந்த வேதிப் பொருள்களைப் பயன்படுத்தி குளிர்சாதனக் காற்றுச் சீரமைப்பு குழாய்கள், மெட்ரோ இரயிலின் வெளிப்புறம் மற்றும் உட்புறங்கள் முழுவதுமாக சுத்தம் செய்யப்படுகின்றன. சர்வதேச அளவிலான சிறந்த நடைமுறைகளின்படி அடித்தளக் கட்டமைப்பில் இரயில் பெட்டிகள் மீண்டும் பொருத்தப்படுகின்றன. நடைமேடையின் மட்டத்துக்கு இணையாக தரையின் உயரத்தைப் பராமரிக்க இரயில் நிலை சரி செய்தலும் மேற்கொள்ளப்படுகிறது.

மெட்ரோ இரயில் நிலைத்த சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, அனைத்து செயல்பாடுகளும் மறுசீரமைக்கப்படுகின்றன. பின்னர் சோதனை வழித்தடத்தில் 40 கிமீ/மணி வரையிலான வேகத்திலும் மற்றும் பிரதான வழித்தடத்தில் 80 கிமீ/மணி வரையிலான வேகத்திலும் இரயில்கள் இயக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்படுகின்றன. பிறகு மெட்ரோ இரயில் பயணிகளின் சேவைக்கு ஏற்றது என்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் சான்றளிக்கப்படுகிறது.

மெட்ரோ இரயில் எண் - 15 ஆனது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உட்குழுவினர் பராமரிப்பு ஊழியர்களுடன் ஒருங்கிணைந்து மறுசீரமைக்கப்பட்ட முதல் மெட்ரோ இரயில் ஆகும். ஒரு மெட்ரோ இரயிலை மறுசீரமைக்க சுமார் 1.77 கோடி ரூபாய் செலவாகிறது என்பதுடன் ஒட்டுமொத்த சீரமைப்புப் பணிகளையும் முடிக்க 40 நாட்கள் ஆகும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.09.2021) கோயம்பேட்டில் அமைந்துள்ள மெட்ரோ இரயில்களை பராமரிக்கும் இடத்தில் மறுசீரமைக்கப்பட்ட முதல் மெட்ரோ இரயிலை ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் திரு. ராஜேஷ் சதுர்வேதி, இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தனி மனித இடைவெளியைக் கடைப்பிடித்துப் பங்கேற்றனர்.

******************